செ.வெ.எண்: 34 நாள்:26.08.2020

# பத்திரிக்கைச் செய்தி

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன்படி மாணவர் சேர்க்கைக்கு இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். இது குறித்து கரூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25 சதவீதம் ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கான சேர்க்கை இணையதளம் வழியாக மேற்கொள்ளப்படுகிறது.

27.08.2020 ம் தேதி முதல் 25.09.2020 ம் தேதிவரை இணையதளம் வழியாக விண்ணப்பிக்க அறிவிக்கப்பட்டுள்ளது. சேர்க்கை பெறவிரும்பும் மாணவர்களுக்கு கரூர் முதன்மைக் கல்விஅலுவலகம், கரூர் மாவட்டக் கல்விஅலுவலகம், குளித்தலை மாவட்டக் கல்வி அலுவலகம், அனைவருக்கும் கல்வி இயக்கக அலுவலகம், மாவட்டத்தில் உள்ள இசேவை மையங்கள், கரூர், தாந்தோனி, க.பரமத்தி, அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை, தோகைமலை, கடவூர் ஆகிய ஒன்றியங்களில் அமைந்துள்ள வட்டாரக் கல்வி அலுவலகங்களில் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் (rtetnschoolsgov.in).

மாணவர்களின் பெற்றோர் பாஸ்போர்ட் அளவுள்ள போட்டோ, பிறப்புச் சான்றிதழ் (அசல்), சாதிசான்றிதழ் (அசல்) நலிவடைந்த வகுப்பினரின் ஆண்டு வருமானம் ரூ.2லட்சத்திற்குள் இருந்தால் வருமானச் சான்று, வருவாய்த் துறையினரால் அளிக்கப்பட்டுள்ள இருப்பிடச் சான்று, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, இவற்றுள் ஏதேனும் ஒன்றில் அசல் ஆகியவற்றுடன் விண்ணப்பங்களை இணையதளம் வழியாக தரவேற்றம் செய்து ஒப்புகைசீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும். மேலும் தகவல்களைப்பெற 04324–255805 என்ற தொலைபேசி எண்ணிற்கு காலை 10 மணி முதல் மாலை 5.45 மணிவரை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள்தொடர்பு அலுவலர், கரூர்